அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அரையாண்டுத்தேர்வு 2023/2024

# தமிழ் - ஆண்டு 4

**புலன்மொழி வளத்தேர்வு** **வாசித்தல்**

மக்கள் முற்காலத்தில் பறையொலி எழுப்பிச் செய்திகளை அறிவித்தனர். புறாக்களைத் தொலை தூரங்களுக்குச் செய்திகளை அனுப்பப் பழக்கினர். வீரர்கள் நீண்ட தூரம் ஓடியும் செய்திகளைக் கொண்டு சென்றனர். இது பின்னர் மரதன் ஓட்டம் எனப்பட்டது. கடந்த நூற்றாண்டில் தொடர்பாடற் கருவிகள் தோன்றின. இப்போது தொடர்பாடலில் கணினியும் கைத்தொலைபேசியும் முதலிடம் பெறுகின்றன. செய்திகளை விரைவாகப் பரிமாற்றம் செய்ய இணையம் துணையாகவுள்ளது.